### வாகனங்களுக்கு இடையிலான தகவல் தொடர்பு

# தொழில்நுட்பத்தை செயல்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13-

நாடு முழுவதும் V2V எனப்படும் வாகனங்களுக்கு இடையிலான தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை செயல்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?என்றும் V2V வன்பொருளுக்காக வாகன உரிமையாளர்களுக்கு நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா என்றும் ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:



வாகனங்களுக்கு இடையிலான தகவல் தொடர்பு (V2V) தொழில்நுட்பத்திற்கான தரநிலைகள் மற்றும் செயல்படுத்தும் கட்டமைப்பை ஒன்றிய அரசு இறுதி செய்துள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?

குறிப்பாகத் தமிழ்நாட்டில், V2V தொழில்நுட்பத்தை பெருமளவில் செயல்படுத்துவதற்குத் தேவையான நாட்டின் சாலை உள்கட்டமைப்பு, டிஜிட்டல் இணைப்பு மற்றும் போக்குவரத்து மேலாண்மை அமைப்புகளின் தயார்நிலை குறித்து அரசு ஆய்வு செய்துள்ளதா? ஆய்வு செய்திருப்பின் அதன் விவரங்கள் என்ன?

கட்டாயமாக்கப்படவுள்ள V2V வன்பொருளுக்காக (hardware) வாகன உரிமையாளர்களுக்கு நிதி உதவி அல்லது மானியங்களை வழங்க அரசு திட்டமிட்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன? திட்டமிடவில்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன?

நாடு முழுவதும் இத்தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக, பல்வேறு அமைப்புகளுடனான ஒருங்கிணைப்புத் திறன் (interoperability), இணையப் பாதுகாப்பு அபாயங்கள், ஓட்டுநர்களின் தயார்நிலை மற்றும் செலவுத் திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான முன்னோடித் திட்டங்கள் ஏதேனும் செயல்படுத்தப்பட்டனவா? அவ்வாறெனில், அவற்றின் முடிவுகள் என்ன?

மேற்கண்டவாறு தயாநிதிமாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

---

### ஆராய்ச்சி, புதுமை மற்றும்

# தொழில்நுட்பத்திறன்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் நேற்று மக்களவையில், நாட்டின் ஆராய்ச்சி, புதுமை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் அளித்த பதிலில், உள்நாட்டு ஆராய்ச்சியை வலுப்படுத்த அதிக நிதியுதவி, உலகளாவிய திறமையாளர்களை ஈர்த்தல், மேம்பட்ட ஆராய்ச்சி உள்கட்டமைப்பு மற்றும் ஆழ்தொழில்நுட்பப் புதுமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்தியா ஏஐ இயக்கம், இந்தியா குறைக்கடத்தி இயக்கம், தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், தேசிய குவாண்டம் இயக்கம் மற்றும் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதுமை நிதி உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆராய்ச்சி நிதி 14,794.03 கோடியிலிருந்து 2025 26ஆம் ஆண்டில் 38,613.32 கோடியாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அறிவியல் திறமையாளர்களை நாட்டிலேயே தக்கவைத்துக்கொள்ள ஆராய்ச்சி உதவித்தொகைகள், மானியங்கள் மற்றும் இளம் விஞ்ஞானி களுக்கான சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், 1 லட்சம் கோடி ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புதுமை நிதி மூலம் உயர்தர ஆராய்ச்சிக்கும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொடக்க நிறுவனங்களுக்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.



செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம், உயிரி அறிவியல் மற்றும் மேம்பட்ட பொருட்கள் துறைகளில் 25 தொழில்நுட்பப் புதுமை மையங்கள், நான்கு குவாண்டம் கருப்பொருள் மையங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நாட்டின் அறிவியல் சிறப்பு, தொழில்நுட்பத் தன்னிறைவு மற்றும் உலகளாவிய போட்டித்திறன் வலுப்படுத்தப்படுவதாக, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

---

### பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்

# அரிசியின் கொள்முதல் முகமைகள் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டதா?

## ஒன்றிய அரசுக்கு ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13-

மாநிலங்களுடன் போதிய ஆலோசனையின்றி ஒன்றிய அரசு உடைந்த அரிசிக்கான விதிமுறைகளை மாற்றியமைப்பு: தமிழ்நாட்டின் கொள்முதல் மற்றும் பொது விநியோகத் திட்டத் தயார்நிலை குறித்து மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், 2026 ஜூலை 1 முதல் பொது விநியோகத் திட்டத்தின் (PDS) கீழ் வழங்கப்படும் அரிசியில் அனுமதிக்கப்படும் உடைந்த அரிசியின் அளவை மாற்றியமைப்பதற்கு முன், மாநில கொள்முதல் முகமைகள் மற்றும் அரிசி ஆலைகளின் தயார்நிலையை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்ததா என்றும்;

திருத்தப்பட்ட தரநிலைகள் தொடர்பாக தமிழ்நாடு அரசு அல்லது அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கங்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கைகள் அல்லது பிரதிநிதித்துவங்கள் பெறப்பட்டனவா என்றும்;

புதிய தரநிலைகளுக்கு இணங்குவதற்கு இடைக்கால அவகாசம், தொழில்நுட்ப உதவி அல்லது நிதியுதவி வழங்க முன்மொழிவு உள்ளதா என்றும்;

மேலும், திருத்தப்பட்ட தரநிலைகளால் கொள்முதல், அரவைப் பணிகள் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உணவுத் தானியங்கள் உரிய நேரத்தில் விநியோகிக்கப்படுவது பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.



**அமைச்சகம் பின்வருமாறு பதிலளித்துள்ளது:**

(அ): பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு 01.07.2026 அன்று, PMGKY மற்றும் பிற நலத்திட்டங்களின் (OWS) கீழ், பச்சை அரிசியில் அதிகபட்சம் 10% உடைந்த அரிசியும், அவித்த அரிசியில் அதிகபட்சம் 5% உடைந்த அரிசியும் கொண்ட மேம்படுத்தப்பட்ட தரமான அரிசியை நாடு முழுவதும் வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேம்படுத்தப்பட்ட அரிசி வழங்கல் இரண்டு ஆண்டுகளில் (KMS 202728 வரை) படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

இந்திய உணவுக் கழகத்தின் (FCI) சோதனை அரவை ஆய்வு மற்றும் முன்னோடித் திட்டம் மற்றும் முதல் கட்டத்தின் வெற்றிகரமான செயல்பாட்டைத் தொடர்ந்து, மேம்படுத்தப்பட்ட அரிசித் திட்டத்தை நன்கு திட்டமிடப்பட்ட முறையில் அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

ஆரம்பத்தில், உணவு மற்றும் பொது விநியோகத் துறை, பிப்ரவரி 2024ல், பஞ்சாப், தெலங்கானா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களில் FCI மூலம் சோதனை அரவையை மேற்கொண்டது. இந்த சோதனை அரவையில், 10% வரை குறைந்த அளவு உடைந்த அரிசியையும், கூடுதல் உடைந்த அரிசியையும் தனித்தனியாக பெறுவது சாத்தியம் எனக் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பஞ்சாப், ஹரியானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய 4 மாநிலங்களில் தலா 10,000 மெட்ரிக் டன் அளவிற்கு முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் முதல் கட்டம் 7 மாநிலங்களில் 50 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பல்வேறு பங்குதாரர்களுடன் களப்பயணங்கள், கூட்டங்கள் மற்றும் மாநில அளவிலான மாநாடுகள் மூலம் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. மாநில முகமைகளும் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் கூட்டங்களை நடத்தின.

(ஆ): இல்லை.

(இ) மற்றும் (ஈ): இரண்டு கொள்முதல் பருவங்களில் (KMS 202728 வரை) படிப்படியான முறையில் மாற்றம் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் கொள்முதல் முகமைகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் படிப்படியாக புதிய முறையை ஏற்றுக்கொள்ள முடியும்.

மாற்றக் காலத்தில், 25% உடைந்த அரிசியைக் கொண்ட CMR மற்றும் மேம்படுத்தப்பட்ட அரிசி ஆகிய இரு முறைகளின் கீழும் கொள்முதல் தொடரும்.

மேம்படுத்தப்பட்ட தரமான அரிசியைச் செயலாக்குவதற்காக, அரவை ஆலை உரிமையாளர்களுக்கு நெல் ஒன்றுக்கு குவிண்டாலுக்கு ரூ.2.23 என்ற விகிதத்திலும், சேமிப்புக் கட்டணமாக மாதத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.1.23 என்ற விகிதத்திலும் கூடுதல் கட்டணங்கள் ஈடுசெய்யப்படுகின்றன.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

---

### முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவுநாள்!

# மதுரவாயல் தெற்கு பகுதியில் புகழ்வணக்க பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி – ஆர்.எஸ்.பாரதி – டி.ஆர்.பாலு எம்.பி. – மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

## காரம்பாக்கம் க.கணபதி அறிக்கை!

சென்னை, ஆக.13–

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு புகழ்வணக்க பொதுக்கூட்டம் பகுதி கழக செயலாளர் (காரம்பாக்கம் க. கணபதி) எனது தலைமையில் இன்று (13.08.2026 – வியாழக் கிழமை) மாலை 5.00 மணியளவில், காரம்பாக்கம், சுபம் காம்ப்ளக்ஸ் அருகில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் ஐ.லியோனி, ஆர்.எஸ்.பாரதி, டி. ஆர்.பாலு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் பா.பெஞ்சமின், மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, எஸ்.அருணாசலம், வ.செல்வக்குமார் எம்.சி, அ.விஜயபாலா, கே.நீலகண்டன், கே. குமரேசன், எஸ்.பி.அருள், செ.ரவி, ச.சங்கர்கணேஷ் எம்.சி, சீ.பாலமுருகன் பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள்: பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி, கே.ராஜி எம்.சி, ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, மு.அ.செந்தில் சுரேஷ், ஆ.மாலினி எம்.சி, ம.உதயகுமார், என். ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், ப.கிரிஜா, என். ரவி, வட்ட கழக செயலாளர்கள் எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், ஜெ.பாஸ்கரன், தி.சார்லஸ், ஆ. செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம். கே.பி.அண்ணாதாசன், எம்.எம். ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம்.இ.ஸ்டாலின், எம்.சி., ப.ஆலன், எம்.ரூபன்,

மதுரவாயல் தெற்கு – வடக்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள்: செல்விரமேஷ், எம்.சி., ஹேமலதா கணபதி எம்.சி., சாந்தி இராமலிங்கம் எம்.சி., ரமணிமாதவன் எம்.சி, மாவட்ட பிரதிநிதிகள்: எம்.எல். நாதன், வி.விஜயன், ஆர்.சேகர், எஸ்.ரவி, ஏ.டி.எத்திராஜ், ஜீ. ராமகிருஷ்ணன், கே.நாராயணன், ஆர்.சிவலிங்கம், கோ.ராமலிங்கம், க.பிருந்தாவனன், ஆர்.ரசூல்தீன், ஆர்.ராகேஷ், ச.எழில்அரசு, கே. ராஜ்குமார், கே.முரளி, பி.சங்கர், எம். ஆர்.சதீஷ், ஜி.குப்புசாமி, எம்.கே. ஞானசேகரன், கு.சதீஷ்குமார், கே. சங்கர், கே.எஸ்.மாறன்குமார் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

இறுதியாக சி.சுந்தர், க. கைலாசம், இரா.ராஜேந்திரன், நரேன் கணபதி ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர் என பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---



# தி.மு.க. இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

**கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.**

**பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.**

**அந்த வகையில், ஆகஸ்ட் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :**

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | தாஜ் நிஷா, க/பெ முஹம்மது ஜின்னா, 11, அசோகர் வீதி, இ.வி.பி.நகர், வெள்ளலூர், கோயம்புத்தூர் – 641 111 |
| 2. | ர.ராஜேஷ்குமார், த/பெ ரவிச்சந்திரன், 54, அக்கையா நாயுடு முதன்மைச் சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209 |
| 3. | செ.தங்கேஸ்வரன், த/பெ செல்லப்பாண்டி, 2/438, கிழக்குத் தெரு, சுக்கிரவாரப்பட்டி, திருத்தங்கல், விருதுநகர் – 626 130 |
| 4. | சு.கீர்த்தனா, த/பெ சுரேஷ், 97/207, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005 |
| 5. | மீ.நிஜாம்தீன், த/பெ மீரான்கான், 28/61–பி, அசேன் உசேன் தெரு, போடிநாயக்கனூர், தேனி – 625 513 |
| 6. | வெ.மீனா, க/பெ வெள்ளியங்கிரி, 4/44, குமாரசாமி நகர், காட்டன் மில் கிழக்குபுரம், பிச்சம்பாளையம், திருப்பூர் – 641 602 |
| 7. | மு.துளசிராமன், த/பெ முருகேசன், 13/1, கீழநத்தம், பில்லூர், நன்னிலம், திருவாரூர் – 609 403 |
| 8. | ரா.கீர்த்திகா, த/பெ ராஜா, 68/11, சத்தியமூர்த்தி நகர், நந்தனம், சென்னை – 600 035 |
| 9. | ப.கதிர்வேலு, த/பெ பழனியப்பன், 12, மரப்பாலம் சாலை–3, கே.ஆர்.எஸ்.நகர், கருங்கல்பாளையம், ஈரோடு – 638 003 |
| 10. | நீ.தினேஷ்குமார், த/பெ நீலகண்டன், 70, சிவன் கோயில் தெரு, பொன்னேரி, திருவள்ளூர் – 601 204 |
| 11. | ப.செந்தாமரைக்கண்ணன், த/பெ பழனி, பறையப்பட்டி, மொரப்பூர், அரூர், தருமபுரி – 636 903 |
| 12. | க.சாய்பிரசாத், த/பெ கருணாகரன், 12, மேட்டுத் தெரு, திருவான்மியூர், சென்னை – 600 041 |
| 13. | அ.நாகராஜ், த/பெ ஆறுமுகம், 32, ராஜாஜி வீதி, பொள்ளாச்சி சாலை, உடுமலைப்பேட்டை, திருப்பூர் – 642 126 |
| 14. | இ.ஷாமலதா, த/பெ இளையராஜா, 24/42, வேம்புலி சுபேதார் தெரு, ஆலந்தூர், சென்னை – 600 016 |
| 15. | கோ.கா.முத்துசாமி த/பெ காளியப்பன், 126/71, மணிமேகலை வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 452 |
| 16. | கா.சுகந்தி, க/பெ காளிராஜ், லோகநாதன் குடியிருப்பு, மயிலாப்பூர், சென்னை – 600 004 |
| 17. | ப.பாப்பாத்தி, க/பெ பழனிசாமி, 2/63, வடக்குத் தோட்டம், இளநகர், திருச்செங்கோடு, நாமக்கல் – 637 212 |
| 18. | அ.ரபின்சாபி, க/பெ அப்துல் ஹமீது, 35, தாஸ்கண்ட் நகர், 1–வது தெரு, விருதாசலம், கடலூர் – 606 001 |
| 19. | மா.ராஜசேகரன், த/பெ மாசிலாமணி, 3/25–பி, ஞானபுரம், குனியமுத்தூர், கோயம்புத்தூர் – 641 008 |
| 20. | பி.காஞ்சனா, க/பெ பிரகாஷ், 41/97, கே.சி.கார்டன், 4–வது தெரு, ஜவஹர் நகர், சென்னை – 600 082 |
| 21. | ஹ.சைலேஷ், த/பெ ஹரிஹரசுதன், 13/205, அண்ணா தெரு, கொசவன்பாளையம், திருநின்றவூர், திருவள்ளூர் – 602 024 |
| 22. | ஜூ.ஆத்திஃபா, த/பெ ஜூபிர் அலி, 31/33, ஐயர்துரை வீதி, பெரிய அக்ரஹாரம், ஈரோடு – 638 005 |
| 23. | பொ.ஜெயபாலன், த/பெ பொன்னுசாமி, 78–பி–பிளாக், நெடுஞ்செழியன் நகர், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600 002 |
| 24. | சி.காமேஷ், த/பெ சிவக்குமார், 49, கொம்மம்பட்டு, கோவிந்தாபுரம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி – 635 207 |
| 25. | பா.பாலசுப்பிரமணியன், த/பெ பாண்டி, 9–13, கிழக்குத் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005 |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.08.2026

கலைஞர் 100 1924 - 2023

---



தி.மு. கழக முன்னோடியும் 185 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளருமான எம்.அசோக்கின் தந்தையுமான எ.முருகேசன் (எ) கபாலி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில், உள்ளகரம் 185 வட்ட கழகம் சார்பில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளர் – மண்டல குழு தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன் மரியாதை செய்தார். இதில் வட்ட கழக செயலாளர் ஜெ. திவாகர், மாவட்டப் பிரதிநிதிகள் ஏ.விநாயகம், சன்.கருணாநிதி, அரங்கநாதன், அன்புரோஸ், செந்தில்,ஜெயகுமார், சுப்பிரமணி, ஜோதி,கருணாகரன், இளைஞர் அணி மகேஷ்வரன், கார்த்திக் முருகன், சரவணன் . மகளிர் அணி அனிதா, காமாட்சி, சித்ரா உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அனைவரும் கலந்து கொண்டனர்.